1981 பிப்ரவரி 7]

திரு. எஸ். சிவராமன் : எனக்கு முன்பு பேசிய தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல் கல்வி இயக்குநர், பாடசாலை தலைவமையாசிரியர் அவ்வளவு பேரும் அந்த இடத்தைக் கொடுக்கக் கூடாது என்று கூறியும் வருவாய் வாரியத்தின் மூலமாக உத்தரவு போடப்பட்டுள்ளது. அங்கு பள்ளிக்கூடம் கட்ட வேண்டுமென்ற நிலை இருக்கும்போது வருவாய் வாரிய கமிஷனர் தியேட்டர் கட்ட உத்தரவு கொடுத்திருக்கிறார். அந்தப் பள்ளிக்கூடத்திற்கும் தியேட்டர் கட்டும் இடத்திற்கும் இடையில் 50 மீட்டர் தூரந்தான் இருக்கிறது. குறுக்கே செல்லும் நெடுஞ்சாலை ஒன்றுதான் இருக்கிறது. இந்தத் தியேட்டரினால் அந்தப் பள்ளிக்கூட மாணவர்கள் படிப்பு பாதிக்கப்படும்.

வருவாய் வாரிய அதிகாரிகள் பாதிப்பு இல்லை என்று சொல்கிறார்கள் என்றால் நாளைக்கு பள்ளிக்கூடத்திலேயே தியேட்டரைக் கட்டலாம் என்று உத்தரவு போட்டாலும் அது அனுமதிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரிசன மக்கள் பயன்படுத்துகின்ற மயான பூமியை ஆக்கிரமித்தபோது அந்தக் குற்றச் சாட்டு வந்தவுடனேயே அந்த ஆக்கிரமிப்பு நீக்கப்பட்டு விட்டது என்று தகவல் தந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு கிளர்ச்சிகள் எல்லாம் நடந்து நிறுத்தப்பட்டு விட்டது என்று தகவல் தந்திருக்கிறார்கள். இப்போதுள்ள நிலை சட்டப்படி அனுமதி வாங்கியவர் கட்டடத்தைக் கட்டிக் கொண்டு இருக்கிறார். இப்போது அரசு தடுத்து நிறுத்த முடியாது. இனிமேல் நீதிமன்றம்தான் முடிவு காண வேண்டிய நிலைமையில் அந்தப் பிரச்சினை இருக்கிறது என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) திருவில்லிபுத்தூர் தொகுதியில் காலரா நோய்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, " இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூர் தொகுதியில் மகாராசபுரம், மம்சாபுரம், கே. புதூர் பகுதியில் 21 பேர் காலரா நோயினால் இறந்தது பற்றிய" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூர் தொகுதியிலுள்ள மகாராசபுரம், சேதுநாராயணபுரம், மம்சாபுரம், கும்மாப்பட்டி, வத்திராயிருப்பு, நாச்சியார்பட்டி, கீழ்பொதத்தல்பட்டி ஆகிய கிராமங்களில் 85 பேர் வயிற்றுப் போக்கு நோயால் (Acute Gastro Enteritis) பாதிக்கப்பட்டனர். தக்க சிகிச்சைக்குப் பின் 73 பேர் நலமடைந்தனர், 12 பேர் இறந்துவிட்டனர். பாதிக்கப்பட்ட 85 பேர்களில் இருவருக்கு மட்டுமே காலரா நோய் கண்டது. அதில் ஒருவர் இறந்துவிட்டார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நோயுற்றவருக்கு தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டதுடன் நோய் மேலும் பரவாமல் தகுந்த தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நோயால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு (21,088 பேருக்கு) காலரா தடுப்பு ஊசி போடப்பட்டது. கிணறுகளுக்கு மருந்து விட்டு நோய் பரவாமல் காக்கப்பட்டது. மேலும் சுற்றுப்புற சுகாதாரத்தில் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. நோயுற்றவர் இல்லங்கள் பூச்சி கொல்லி மருந்திட்டு சுத்தப்படுத்தப்பட்டது. மக்களுக்கு நோய் தடுப்பு குறித்து விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன. நோயால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் சுற்றியுள்ள பகுதிகளிலும் நோய் பரவாமல் இருக்க தகுந்த தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டில் கிராமப் பகுதிகளிலே உள்ள மக்கள் காலரா வியாதி எப்படிப் பரவுகிறது என்று அறியாமையால் இருந்துகொண்டிருக்கிறார்கள். உதாரணமாக சேலம் மாவட்டத்திலே ஏர்க்காடுக்கு அருகே, வெள்ளக்கடை கிராமத்திற்கு அருகிலே அங்கே உள்ள பெண்கள் எல்லாம் ஆடவர்களை, சிறு குழந்தைகளை எல்லாம் வெளியூருக்கு அனுப்பிவிட்டு காளி கோயிலுக்கு முன்னால் ஆடையில்லாமல் டான்ஸ் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். இது 23—1—1981 ஆம் தேதிய தினத்தந்தி பத்திரிகையிலும், மாலைமுரசு பத்திரிகையிலும் வந்திருக்கிறது. இப்படி அறியாமை உள்ள மக்களுக்கு எடுத்துக்காட்டும் வண்ணம்—அப்படி ஏற்படுவதற்கு விஞ்ஞான ரீதியாக ஏதாவது ஆதாரம் இருக்கிறதா—தமிழக அரசு செய்தித் துறையின் மூலமாக காலரா எப்படிப் பரவுகிறது என்று கிராமப்புற மக்களுக்கு எடுத்துக்காட்ட முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

1981 பிப்ரவரி 7]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய மாவட்டத்தைவிட்டு சேலம் மாவட்டத்திற்கு விரைந்து இருக்கிறார். சேலம் மாவட்டத்தினுடைய குறிப்புகள் இங்கே இருக்கின்றன. அந்தமாதிரியான நிலைமைகளைத் தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறோம். 30 ஆயிரம் தடுப்பு ஊசிகள் போட்டு இருக்கிறோம். அது மட்டுமல்ல, காலரா நோய் என்று உடனடியாகக் கருதிவிடக் கூடாது. புதிதாக அறுவடை செய்த உணவு தானியங்களை முழுமையாக வேகவைக்காமல் அல்லது சரியாக வேகவைக்காமல் சாப்பிட்டதுதான் காரணம் Acute Gastero Enteritis அதனால் வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. காலரா நோய் என்று இரண்டு நோயாளிகளைக் கொண்டுவந்தார்கள். ஒருவர் இறந்து விட்டார், இன்னும் ஒருவர் நன்றாக இருக்கிறார்.

திரு. இரா. தாமரைக்கனி: கிழக்கே போகும் இரயில் என்ற சினிமா படத்தைப் பார்த்துவிட்டுத்தான் மக்கள் இந்த மாதிரி நடக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் ஏழை எளிய மக்களாக இருப்பதால் அவர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து நிதி ஏதாவது கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: கிழக்கே போகும் இரயிலோ, மேற்கே போகும் இரயிலோ அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். சுகாதார விஷயங்களை எப்படிக் கவனிக்கவேண்டுமென்பதற்காக டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசர் மூலமாக மாவட்டங்களில் எல்லாம் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், தடுப்பு ஊசிகள் போடச் சொல்லப்பட வேண்டுமென்றும் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். பாதுகாக்கப்பட்ட குடிநீர் எந்தவிதமான இன்ஸ்பெக்ஷனும் இல்லாமல் சரியான வகையில் கொடுக்கப்பட வேண்டுமென்று எல்லா மாவட்ட ஹெல்த் ஆபீசர்கள் மூலமாகவும் ஆணை செக்ரடேரியட் மூலமாகப் பிறப்பிக்கப்பட்டு அவர்கள் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது பிரச்சினை ஒன்றும் இல்லை.

3. ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(ஆ) சட்ட முன்வடிவுக்கான விளக்கங்கள் தமிழில் அளிக்க வேண்டுதல்.

திரு. என். சங்கரய்யா: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், இப்போது இங்கே எடுத்துக்கொள்ளப்படக்கூடிய கிராம அலுவலர் நீக்கம் பற்றிய சட்டமுன்வடிவுக்கான அரசு சார்பாக விளக்கங்கள்